**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.543/2024 |
| Deposition of witness for Prosecution | : | PW-2 |
| Name | : | இருளப்பன், வயது 31 |
| Father Name/Husband Name | : | சமுத்திரவேல் |
| Village | : | இந்திரா நகர், பாறைப்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | சமையல் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of June 2026.

**(A1, A2 present).**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பாறைப்பட்டியில் வசித்து சமையல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அவர்கள் எனது உறவுக்காரர்கள். அ.சா.1 ஐ எனக்குத் தெரியும். கடந்த 05.08.2024 ம் தேதி காலை 08.45 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்த போது வெளியே சத்தம் கேட்டது. நான் என்னவென்று பார்த்தபோது கணேசமூர்த்தியை ஆஜர் எதிரிகளான பாக்கியராஜ் கம்பியாலும், ராகுல் கல்லாலும் அடித்தார்கள். அதை நான் பார்த்து விளக்க முற்பட்ட போது என்னையும், ஆஜர் எதிரிகள் கையால் என்னை அடித்தார்கள். பின்னர் சம்பவம் தெரிந்து கணேசமூர்த்தியின் அப்பா பொன்னுச்சாமி கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கணேசமூர்த்தியை சிகிச்சைக்காக சேர்த்தார். இச்சம்பவம் இந்த வீட்டின் அருகே தான் நடந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. அ.சா.1 எனக்கு சித்தப்பா உறவு முறை. பட்டியல் சாட்சி 3 குருநாதன் எனக்கு தாய்மாமா உறவு முறை. பட்டியல் சாட்சி 4 செந்தூர்பாண்டியன் என்ன உறவு முறை என்றால் அவர் எனக்கு உறவினர் கிடையாது. பட்டியல் சாட்சி 5, அ.சா.1ன் மாமா பையன். பட்டியல் சாட்சி 6 கிருஷ்ணன் எனது தாத்தாவின் மகன். பட்டியல் சாட்சி 7 தான் அ.சா.1ன் தந்தை. அ.சா.1ன் தாயார் தான் பட்டியல் சாட்சி 8. நானும், அ.சா.1ம் சேர்ந்து 04.08.2024 அன்று எதிரி ராகுலின் சித்தி அமுதாவைப் பார்த்து இவளை போட்டால் சூப்பராக இருக்கும் என்றும்,

என்றைக்காவது ஒரு நாள் மாட்டாமலா போயிருவாள் என்று அசிங்கமாகப் பேசினோம் என்றால் சரியல்ல. மறுநாள் இது சம்பந்தமாக அதைக் கேட்டதற்கு எதிரி ராகுல் எங்கள் மீது புகார் கொடுத்த நான் உட்பட ஐந்து பேர் மீது எதிர் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3. இந்த வழக்கு சம்பவமும், மேற்படி எதிர் வழக்கு சம்பவமும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில், ஒரே தேதியில் நடைபெற்றது என்றால் சரிதான். நான் மற்றும் அ.சா.1 மதுபோதையில் மேற்படி அமுதாவை அசிங்கமாகப் பேசிய நிலையில், அன்றைய தினம் நாங்கள் மதுபோதையில் இருந்ததால் மறுநாள் ஆஜர் எதிரிகள் என்னிடம் பொன்னுச்சாமி முன்பு அதைக் கேட்டதற்கு எங்கள் தரப்பினர் மற்றும் நான் தான் ராகுலை கம்பால் அடித்து, வலது தொடையில் காயம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல, நாங்கள் மதுபோதையில் இல்லை, நான் சத்தம் கேட்டு தான் வீட்டை விட்டு வெளியே வந்தேன், எனது வீட்டு முன்புதான் சம்பவம் நடைபெற்றது. நான் சம்பவம் நடந்து முடிந்த பிறகுதான் வந்தேன் என்றால் சரியல்ல, சம்பவம் நடக்கும் போது நான் வந்தேன். அ.சா.1 க்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

4. நாங்கள் மேற்படி அமுதாவை அசிங்கமாகப் பேசியதை எதிரிகள் நியாயம் கேட்டதால் நாங்கள் தான் எதிரிகளை அடித்ததால், அவர்கள் புகார் கொடுக்கச் சென்றதால் பதிலுக்கு இந்த பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடிக்காத நிலையில் நான் அ.சா.1 க்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.